கேட்ட தொகை இரண்டு லட்சம் ரூபாய். சென்னை மண்டல துணை இயக்குநர் ரூ. 50,000-க்கு சிபார்சு செய்து வாரியத்திற்கு 9—3—1981-ல் அனுப்பினார். வாரியம் மேற்படி எடுத்துரையை பரிசீலனை செய்து பார்த்ததில் சங்கத்தின் துணைவிதி மற்றும் கதர் கிராமத் தொழில் குழுவின் நிதி உதவி வரம்பிற்குட்பட்டு வாரிய ஆணை 70, நாள் 8—4—1981-ல் ரூ. 35,000 மூலதனம் கடன் பெற ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : இப்படி காதி வாரியம் மூலம், நெசவாளர்கள் சங்கங்கள் மூலம் பல பொருள்கள் மார்க்கட்டுக்கு வருகின்றன. சம்பந்தப்பட்ட பொருள்களை விற்பனை செய்ய அரசு என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது? கதர் வாரியம் துணி விற்பனை செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கோரைப்பாய் பற்றியது

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளை அதிகப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 790—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவமனைகளை அதிகப்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை மருத்துவமனைகள் எங்கெங்கு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்—(அ) தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை மருத்துவ மனைகளை அதிகப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. ப. தீர்த்தராமன் : தர்மபுரி மாவட்டத்தில் ஆடு மாடுகள், கால்நடைகள் அதிகமாக ஆகியிருக்கின்றன. ஆகவே கால்நடைகள் அதிகரித்திருப்பதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் கால்நடை மருத்துவ மனைகளை கூடுதலாக அமைத்துத் தரவேண்டும், அப்படி அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தர்மபுரி மாவட்டத்தில் 22 கால்நடை மருந்தகங்களும், ஐந்து மருந்தகம் இணைக் கேந்திரகிராம நிலையங்களும் உள்ளன. இவை தவிர கிருஷ்ணகிரி உதவி இயக்குநர் ஆளுகையில் ஒன்றும், தர்மபுரி உதவி இயக்குநர் ஆளுகையில் ஒன்றும் ஆக இரு இயங்கும் கால்நடை மருந்தகங்களும் இயங்கி வருகின்றன.

1981 ஏப்ரல் 23]

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1977—78-ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டம் சித்தேரியில் ஒரு கால்நடை மருந்தகமும் 1980—81-ஆம் ஆண்டு கோட்டப்பட்டியில் ஒரு கால்நடைமருந்தகமும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின்கீழ் 1979—80-ல் தர்மபுரியில் கால்நடை மருத்துவமனை கால்நடை பிரதம மருத்துவ நிலையமாக நிலை உயர்த்தப்பட்டது.

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பால் பண்ணை அபிவிருத்தி, தீவன பெருக்கத் திட்டம், கால்நடை நோய்க் கட்டுப்பாடு, கால்நடை செயற்கை கருவூட்டும் மற்றும் அது சம்பந்தமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது பற்றி பிரச்னை ஒன்றுமில்லை.

(முற்பகல் 9-50).

திரு. ப. தீர்த்தராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் வட்டத்தில், பெண்ணாகரத்தில் மட்டும் ஒரு மருத்துவமனை இருக்கிறது. மற்ற இடங்களில் மருத்துவமனை இல்லை. அங்கேயிருக்கின்ற கால்நடைகளுக்காக அரசு கடன் பெற்று வாங்கியிருக்கின்ற காரணத்தினால், இன்ஷூர் செய்ய வேண்டியிருக்கிறது. கால்நடைகள் இறந்துவிட்டால், பெண்ணாகரத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அங்கே அருகிலுள்ள பாப்பாரப்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்தில், இது வரைக்கும் கால்நடை மருத்துவமனைகள் ஒன்றுகூட இல்லாமல் இருக்கிறது. ஆக, கிருஷ்ணகிரியில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே மருத்துவமனைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்க நீங்கள் ஒன்றுமில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்.

திரு. க. இரா. சின்னராசு : கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டத்திற்கு மையமான, போக்குவரத்திற்கு வசதியான பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், 100 ஆண்டுகளுக்கு முன் இருந்த மருத்துவமனை சிறியதாக இருப்பதால், அதைப் பெரிய மருத்துவமனையாக விரிவுபடுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறி இருக்கிறேன். இருந்தாலும் மறுபடியும் கூறுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதித் திட்டத்தின் கீழ் 1979-80-ல் அந்த கால்நடை மருத்துவமனை, பிரதம மருத்துவ நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு இந்த அரசு ஏற்பட்டவுடன், பல கோடி ரூபாய் கொடுத்து, கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். அதன் அடிப்படையில் பல மருத்துவமனைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே தமிழகத்திலே, கால்நடை வளர்ப்புக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டு, மத்தூர் கேட்டில் பார்ம் இருக்கின்ற காரணத்தினாலே, மேலும் அங்கே ஒரு இயக்குநர் அகமே ஏற்படுத்தலாமா என்ற அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்குரிய வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கம் திட்டம்.

(வினா எண். 79—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிழக்கு முகவை மாட்டத்தில் (Frozen Semen Bank) உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் :பேரவைத் தலைவர் அவர்களே, உறைவிந்து உற்பத்தி நிலையம் வேறு எந்தெந்த மாவட்டங்களில் துவக்க அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்